இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1990, யூன் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 90 தபாற் செலவு: ரூபா 1.00

1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 26/90

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்தெண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈஈ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:— 262 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஈஈ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக, அல்லது வேறெதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் ஒருவராக இருப்பின் ;".

3. ஆயிரத்துத் தொளாயிரத்தெண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாக திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (1அ) இச்சட்டத்தில் முரணாகவுள்ள எவையேனும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஓர் உள்ளூர் அதிகார சபையின் தேர்தல் பிரதேசத்திற்கான ஒரு தேர்தல் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு நியமனப் பத்திரத்திலும், அத்தகைய நியமனப் பத்திரத்தில் பெயர் குறித்து நியமிக்கப்படும் மொத்த வேட்பாளர் தொகையில் நாற்பது சதவீதத்திற்குக் குறையாத இளைஞர்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(1ஆ) ஆணையாளர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை தொடர்பாகவும் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளரின் எண்ணிக்கையைக் குறித்துரைக்க வேண்டும். பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை அவ்வெண்ணிக்கையின் நாற்பது சதவீதத்தின் ஒரு முழு எண்ணாகவும் ஒரு பின்னமாகவும் இருந்தால், அம் முழுவெண்ணுக்கும் பின்னத்திற்கும் மிகக் கிட்டிய முழு எண் இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக நாற்பது சதவீதம் எனக் கருதப்படல் வேண்டும் ;" அத்துடன்,

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அந்த உள்ளூரதிகார சபைக்குத் தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக் கைக்குச் சமமான எண்ணிக்கையோடு மூன்றைக் கூட்டவரும் அத்தகைய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்த உள்ளூ ரதிகார சபைக்குத் தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர் களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையோடு ஆறு அல்லது அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மூன்றி லொன்று என்பவற்றுள் எது குறைவானதோ அதனைக் கூட்ட வரும் அத்தகைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத் துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட் பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(4அ) நியமனப்பத்திரத்தில் பெயர் காணப்படும் ஒவ்வோர் இளம் வேட்பாளரதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் அத் தாட்சி பண்ணப்பட்ட பிரதி ஒன்று அல்லது அத்தகைய இளம் வேட்பாளரால், அவரது பிறந்த தேதியை அத்தாட்சிப் படுத்தி கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசியொன்று அத் தகைய நியமனப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத் தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "வேட்பாளர்களில் எவருமே தெரிவு செய்யப்படாதவிடத்தும் அத்துடன் அத்தகைய சுயேச் சைக் குழுவால் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அத்தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் எட்டில் ஒரு பங்கை விஞ்சாதவிடத்தும் அத்தகைய குழுவின் வேட்பாளர்கள் தொடர் பில் செலுத்தப்பட்ட வைப்புப்பணம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "வேட்பாளர்களில் எவருமே தெரிவு செய்யப்படாதவிடத்து அத்தகைய குழுவின் வேட்பாளர்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட வைப்புப்பணம்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திமூன்றாம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத் தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின் றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) வை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) இருபத்தெட்டாம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் பெயர் நியமனம் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட வாறான இளம் வேட்பாளர்களின் முழு எண்ணிக்கை யைக் கொண்டிராத ; அல்லது,

(ஆஆஆ) இருபத்தெட்டாம் பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக இளம் வேட்பாளர் ஒருவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் அத்தாட்சி பண்ணப்பட்ட பிரதியொன்று அல்லது அத்தகைய இளம் வேட்பாளரால் கையொப்பமிடப்பட்ட சத்தியக்கடதாசியொன்று நியமனப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிராத; அல்லது ";

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (1அ) பெயர் நியமனக் காலப்பகுதியின் கடைசி நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் ஒன்று முப்பது மணிக்கும் இடையில் ஒரு பெயர் நியமனப் பத்திரத்திற்கான ஆட்சேபனைகள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் செய்யப்படலாம் என்பதுடன், அந்த நாளின் பிற்பகல் ஒன்று முப்பது மணிக்குப் பின் அத்தகைய ஆட்சேபனைகள் எவையும் தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படலாகாது.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "அத்தகைய எண்ணிக்கையான ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பது அமைச்சருக்குச் சட்டபூர்வமானதாயிருத்தல் வேண்டுமென்பதுடன்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய எண்ணிக்கையான ஆட்களை, 28 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, பெயர் குறித்து நியமிப்பது அமைச்சருக்குச் சட்டபூர்வமானதாயிருத்தல் வேண்டுமென்பதுடன்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) வில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) "முடிவை அறிவிக்கத் தவறினால்—", என்ற சொற்களுக்குப் பதிலாக "முடிவை அறிவிக்கத் தவறினால், தெரிவத்தாட்சி அலுவலரானவர் அத்தகைய அங்கீகாரம் பெற்ற அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்களால் காட்டப்பட்டவாறாக, ஆனால் சிங்கள அகர வரிசையில் இடப்பட்டபடி வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட தனி நிரல் ஒன்றை உடனடியாகத் தயாரிக்க வேண்டுமென்பதுடன்—", என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "அத்தகைய நியமனப் பத்திரத்தில் எவரது பெயர்கள் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் காணப்படுகின்றனவோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தனியான நிரலில் எவரது பெயர்கள் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் காணப்படுகின்றனவோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பந்தியின் உட்பந்தி (ii) இல் 'அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படுகின்றனவோ" என்ற சொற்களுக்குப் - பதிலாக "வேட்பாளர்களது பெயர்களைக் கொண்ட அத்தகைய தனிநிரலில் காணப்படுகின்றனவோ" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "சிங்கள அகர வரிசைப்பிரகாரம் குறிப்பிடப்பட்டவாறான வேட்பாளர்களின் பெயர்களும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "சிங்கள அகர வரிசைப்படி, வேட்பாளர்களால் தெரிவிக்கப்பட்டவாறான அவர்களின் பெயர்களைக் கொண்ட ஒரு தனி நிரலும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தொடர் வரிசையில்" என்பது தொடங்கி "மூன்றால் அதிகரித்துவரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு அல்லது பல வரிசைகளில் தொடரிலக்கத்தை உள்ளடக்கும் ஒரு கூட்டின் வலதுகைப் பக்கத்தில் தோன்றும் ஒரு தொடரிலக்கத்தை உள்ளடக்கும் ஏதேனும் ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஏதேனும் ஒரு அல்லது பல வெற்றுக்கூடுகளில் மூன்று விருப்புத் தெரிவுகளை குறிப்பிடுவதற்கான ஏற்பாட்டுடன், ஆறு அல்லது அத்தகைய எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு என்பவற்றுள் எது குறைவானதோ அதனைக்கொண்டு அதிகரித்துவரும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு அப்பிரிவின் (6ஆ) என்னும் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் பந்தி (அ) என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) எல்லா அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களாலும் பெறப்பட்ட செல்லுபடியான மொத்த எண்ணிக்கையான வாக்குகள் இதனகத்துப் பின்னர் "இயைபான எண்ணிக்கையான வாக்குகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கம் செய்வதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் பந்தி (ஈ) இல் "(பந்தி (அ) என்பதன் கீழ் தகைமையிழந்த கட்சிகளையும் குழுக்களையும் தவிர)" என்ற சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் பந்தி (எ) இல் "அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரத்தில்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ் தயாரிக்கப்பட்ட தனி நிரலில்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு, அப்பிரிவில் "எவ்வேட்பாளருக்காக அவர் முந்துரிமை ஒன்றைக் குறித்துக் காட்டியுள்ளாரென்பதை" என்ற சொற்களுக்குப் பதிலாக "எவ்வேட்பாளருக்காக அல்லது வேட்பாளர்களுக்காக அவர் முந்துரிமை ஒன்றை அல்லது முந்துரிமைகளைக் குறித்துக் காட்டியுள்ளாரென்பதை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) இருபத்தெட்டாம் பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சத்தியக் கடதாசியொன்றில் அடங்கியுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென அறிந்திருந்தும் அதிற் கையொப்பமிடும் ஆளெவரும் ; அல்லது".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவு அதிலுள்ள " பட்டினம் " என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"இளைஞர்" என்பது 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர் பதிவுச் சட்டத்தின்கீழ் பயன்பாட்டிலுள்ள தேருநர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட, ஆரம்பித்த ஆண்டின் யூன் முதலாம் தேதியன்றுள்ளவாறாக பதினெட்டு வருடங்களுக்குக் குறையாததும் எந்தத் தேர்தலில் அவர் ஒரு வேட்பாளராக வர நாடுகின்றாரோ இக்கட்டளைச் சட்டத்தின் கீழான அந்தத் தேர்தலொன்றில் பெயர் நியமன காலப்பகுதியின் கடைசி நாளன்று உள்ளவாறு முப்பத்தைந்து வருடங்களுக்கு மேற்படாததுமான வயதுடைய ஆள் எனப் பொருளாகும்".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணையை மாற்றீடு செய்தல்.

15. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :—

"முதலாம் அட்டவணை (பிரிவு 28 (2) )

பெயர் நியமனப் பத்திரப் படிவம்.

.......................சபை /பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியாகிய ........................கட்சி/ சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் (சுயேச்சைக்குழுவாயின் அக்குழுவின் தலைவர்........) .................... மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகப் பின்வரும் ஆட்களை இத்தால் வேட்பாளர்களாக நியமிக்கிறது:—

குழு I—வேட்பாளர்கள்

| 1. பெயர் | 2. விலாசம் | 3. தொழில் | 4. வேட்பாளர் சம்மதம் தெரிவிக்கும் கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

குழு II—இளம் வேட்பாளர்கள்

| 1. பெயர் | 2. விலாசம் | 3. பிறந்த தேதி | 4. தொழில் | 5. வேட்பாளர் சம்மதம் தெரிவிக்கும் கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

இந்த நியமனப்பத்திரத்தில் எந்த இளம் வேட்பாளர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த இளம் வேட்பாளர்கள் இக்கட்டளைச் சட்டத்தின் 89 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வயதெல்லைக்குள்ளாக இருக்கின்றனரென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியின் செயலாளரின்/குழுத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :—————————

முகவரி :—————————

கையொப்பம் : ..........................................................

மேற்கூறப்பட்ட அங்கீகாரம் பெற்ற அரசியற் கட்சியின் செயலாளர்/குழுத்தலைவர்....

..................................இல் 19......ஆம் ஆண்டு........மாதம்

....ஆம் நாள் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார்.

..............................
சமாதான நீதவான் அல்லது
பிரசித்த நொத்தாரிசு.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்தல்.**

16. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை "ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்துரைக்கப்பட்ட" என்ற சொற்கள் முதல் "புள்ளடியொன்றை இடுதல் வேண்டும்" என்ற சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கி விட்டு அதற்குப் பதிலாக, 'அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை நேரொத்த தொடர் இலக்கத்தைக் கொண்ட ஒரு கூட்டின் வலதுகைப் பக்கத்தில் தோன்றுகின்றதாரப்பட்ட ஒரு தொடரிலக்கத்தினைகொண்ட ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஏதேனும் ஒரு அல்லது பல வெற்றுக்கூடுகளில் மூன்றுக்கு மேற்படாத ("X" என்ற) புள்ளடியை அல்லது புள்ளடிகளை இடுதல் வேண்டும்'' என்ற சொற்களை அவற்றிற்குப் பதிலாக இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.**

17. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டுப் பின்வரும் அட்டவணை அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

## மூன்றும் அட்டவணை

### வாக்குச்சீட்டின் முன்பக்க மாதிரி

அடியிதழ் இல.

| | |
|---|---|
| கட்சி "அ" | சின்னம் |
| கட்சி "ஆ" | சின்னம் |
| கட்சி "இ" | சின்னம் |
| சுயேச்சைக்குழு "1" | சின்னம் |
| சுயேச்சைக்குழு "2" | சின்னம் |
| சுயேச்சைக்குழு "3" | சின்னம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 28 | | | |
| 2 | | | | 29 | | | |
| 3 | | | | 30 | | | |
| 4 | | | | 31 | | | |
| 5 | | | | 32 | | | |
| 6 | | | | 33 | | | |
| 7 | | | | 34 | | | |
| 8 | | | | 35 | | | |
| 9 | | | | 36 | | | |
| 10 | | | | 37 | | | |
| 11 | | | | 38 | | | |
| 12 | | | | 39 | | | |
| 13 | | | | 40 | | | |
| 14 | | | | 41 | | | |
| 15 | | | | 42 | | | |
| 16 | | | | 43 | | | |
| 17 | | | | 44 | | | |
| 18 | | | | 45 | | | |
| 19 | | | | 46 | | | |
| 20 | | | | 47 | | | |
| 21 | | | | 48 | | | |
| 22 | | | | 49 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | | | | 50 | | | |
| 24 | | | | 51 | | | |
| 25 | | | | 52 | | | |
| 26 | | | | 53 | | | |
| 27 | | | | 54 | | | |

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஒன்பதாம் அட்டவணையானது அவ்வொழுங்கு விதிகளின் அட்டவணையில் காணப்படும் "படிவத்தின் பின் பக்கம்" என்ற பகுதியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துதல்.

"(1) பந்தி (அ) இன் உட்பந்தி 3 இல் "வாக்குச்சீட்டின் அடியில் குறியீடொன்றை" என்பது தொடங்கி அவ்வுட்பந்தி முடியும் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை நேரொத்த தொடர் இலக்கத்தைக் கொண்ட ஒரு கூட்டின் வலது பக்கத்தில் தோன்றுகின்ற ஒரு தொடர் இலக்கத்தினை கொண்ட ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஏதேனும் ஒரு அல்லது பல வெற்றுக் கூடுகளில் மூன்றுக்கு மேற்படாத ("X") என்ற, புள்ளடியை இடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம்' என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

(2) பந்தி (அ) இன் உட்பந்தி 4 இல் "வாக்குச் சீட்டின் அடியில் குறியீடொன்றை" என்பது தொடங்கி அவ்வுட் பந்தி முடியும் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை நேரொத்த தொடர் இலக்கத்தைக்கொண்ட ஒரு கூட்டின் வலது பக்கத்தில் தோன்றுகின்ற ஏதேனும் ஒரு தொடர் இலக்கத்தினைக் கொண்ட ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஒரு அல்லது பல வெற்றுக்கூடுகளில் மூன்றுக்கு மேற்படாத ("X" என்ற) புள்ளடியை அல்லது புள்ளடிகளை இடுவதன் மூலம் காட்டலாம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

**19.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.